

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், கோனாப்பட்டு, அருள்மிகு சின்னியம்மத்தாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (24.09.2025) பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



சென்னை, பாரதி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் (24.09.2025) நடைபெற்ற விழாவில், அமைச்சர் முனைவர் கோவி. செழியன் Mando Automotive, UPS (United Parcel Service) o Agnikul (Institute Management committee) உறுப்பினராவதற்கான அழைப்பிதழினை வழங்கினார். உடன் உயர்கல்வித் துறை அரசு செயலாளர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி, 5 வது மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமலு, கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் சு. தாரணி ஆகியோர் உள்ளனர்.

### மதுரை – தேனூரில் 195 பயனாளிகளுக்கு

# 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

**மதுரை, செப். 26 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.9.2025) மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டு, கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாட்டில் குடிசை வீடுகளே இல்லை என்ற நிலையை உருவாக்கிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 - 2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்களுக்கு லட்சக்கணக்கான கான்கிரீட் வீடுகளை கட்டி வழங்கினார்.

தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து 3.10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளை கட்டி வழங்கி வருகின்றார்கள். மேலும் பயனாளிகளின் வீட்டில் 12,000 ரூபாய் மதிப்பீட்டில் கழிப்பறை கட்ட நிதி வழங்கப்படுகின்றது. பயனாளிகளுக்கு 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ள 100 வேலை நாட்களுக்கு தலா 33,600 ஊதியமாக வழங்கப்படுகின்றது.

மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூர் உள்வட்டத்திற்கு உட்பட்ட தேனூர் கிராமத்தில் 128 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கைகள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 119 பயனாளிகள், 117 பொதுமக்கள் என மொத்தம் 401 பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் சார்பில் இலவச வீட்டு மனை அனுபந்தப்பட்டா வழங்கப்பட்டது.

இந்த பயனாளிகளில் தற்போது வரை 74 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கை கள், தேனூர் கிராமத்தை சேர்ந்த 84 பயனாளிகள் என மொத்தம் 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஆணைகள் வழங்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் (24.9. 2025) மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் தேனூர் கிராமத்தில் ஒரே இடத்தில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கிராம பொதுமக்கள் உள்பட 195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வீடுகள் கட்டும் பணிகளை அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு வீடுகள் தரமாக கட்டப்படுவதையும், குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்யுமாறும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த குடியிருப்பு பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஒரு மரக்கன்றினை நட்டு நீருற்றினார்.

இந்த ஆய்வின்போது வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ் செல்வன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி க. வானதி உள்பட அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சிக்கு வருகை தரும்

# தெலங்கானா முதல்வரை பாசத்துடன் வரவேற்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.26-

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் - "புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன்" திட்டங்களின் 2025 - 26 கல்வி ஆண்டிற்கான தொடக்க விழா குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**கல்வியே நமது இனத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படை எனச் செயலாற்றி வரும் நமது திராவிட மாடல் அரசு, நாளை நடத்தவுள்ள கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சிக்கு வருகை தரும் அன்புச் சகோதரர் - தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களைப் பாசத்துடன் வரவேற்கிறோம்!**

**நமது அரசின் சாதனைத் திட்டங்களான புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் விரிவாக்கமும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாணவச் செல்வங்களின் முகங்களைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

### திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் படைப்புகளுக்கான கவிதைப் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை!

*திருவாரூர், செப். 26 -*

*திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில், பேரறிஞர் அண்ணா- மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் படைப்புகள் குறித்து கவிதை எழுதும் போட்டி, மேல்நிலை முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இடையே நடைபெறுகிறது. இந்த போட்டியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவ, மாணவிகளும் பங்கேற்று பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் படைப்புகள் பற்றிய கவிதைகளை எழுத இருக்கின்றனர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை ஏற்க,மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் முன்னிலை ஏற்கின்றனர்.*

*"தமிழ்நாட்டை தலை குனிய விட மாட்டேன்" என்கிற தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கொள்கை முழக்கத்தை முன்னெடுத்து, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காத்திட பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் செயல்பாடுகளும் அடித்தளமிட்டன.*

*அத்தகைய திராவிட இயக்க முன்னோடித் தலைவர்களின் படைப்புகளை மாணவ, மாணவிகளுக்கு மேலும் எடுத்துச் செல்லும் வகையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய ஆளுமைகளின் படைப்புகளில் இருந்து ஏதேனும் ஒன்றைப் பற்றி 24 வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதும் போட்டி, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் சீரிய வழிகாட்டுதலின்படியும், இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் அன்வர் ராஜா, கலைராஜன் உள்ளிட்ட நிர்வாகிகளின் ஆலோசனைகள்படியும், திருவாரூர் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமையில் 28.09.2025 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் கோரடச்சேரி, வி.ஆர்.என். திருமண அரங்கில் இந்த போட்டி நடைபெறுகிறது. போட்டியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளும், கல்லூரி மாணவ மாணவிகளும் பங்கேற்று கவிதைகளை எழுத இருக்கின்றனர்.*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் படைப்புகளான தமிழனின் மறுமலர்ச்சி, தீ பரவட்டும், இலட்சிய வரலாறு, பணத்தோட்டம், ஓர் இரவு உள்ளிட்ட படைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றியோ அல்லது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளான கலைஞரின் நவமணிகள், சிறையில் பூத்த சின்ன மலர்கள், பேசும் கலை வளர்ப்போம், குறளோவியம், தொல்காப்பியர் பூங்கா ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப்பற்றிய கவிதையை 24 வரிகளுக்கு மிகாமல் எழுதி ஒப்படைக்க வேண்டும்.*

*இந்த கவிதையில் நடுவர்களால் சிறந்த கவிதையாக தேர்ந்தெடுக்கப்படும் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளில் முதல் மூன்று பேர்களும் கல்லூரி மாணவ மாணவிகளில் முதல் மூன்று பேர்களும் தெரிவு செய்யப்பட்டு, மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பப்படுவர்.*

*இந்தப் போட்டியினை மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகளான அமைப்பாளர் நல்லாசிரியர் புலவர் எண்கண் சா.மணி துணை தலைவர் தெ.தியாகராஜன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சோம.இளங்கோவன், ப.ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், கோ. சோமசுந்தரம், பாலமுத்து மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக இலக்கிய அணி நிர்வாகிகள், மாவட்ட தி.மு.க.வுடன் இணைந்து நடத்துகின்றனர்.*

### தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர்

# பீலா வெங்கடேசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, செப்.26–**

**தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் பீலா வெங்கடேசன் மறைவுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :–**

**தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் திருமிகு. பீலா வெங்கடேசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.**

**அடிப்படையில் மருத்துவரான பீலா வெங்கடேசன் அவர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி, பல்வேறு முக்கியத் துறைகளில் செயலாளராகப் பணியாற்றிய அனுபவமிக்கவர். கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் சவால் மிகுந்த மருத்துவத் துறைச் செயலாளராகப் பணியாற்றியவர். மேலும் பல பெரும் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்த அவரது அகால மரணம் மிகுந்த வருத்தமளிக்கிறது.**

**அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கீழாத்தூர் கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில்,100 மாணவியர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல புதிய சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்து, மாணவிகளுக்கு விடுதியில் தங்குவதற்கான அத்தியாவசியப் பொருட்களை பொருட்களை நேற்று முன்தினம் (24.09.2025) வழங்கினார்கள்.



திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியம், அம்மாபட்டியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 7.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, குடிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அடிவள்ளி முரளி ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இதில் உடுமலை வருவாய் கோட்டாட்சியர் குமார், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) சரவணன், குடிமங்கலம் ஒன்றிய செயலாளர்கள் சா.ராஜமாணிக்கம் (கிழக்கு), அனிக்கடவு ச.கிரி (வடக்கு), தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம்பிரசாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் கொந்தளம் ஊராட்சியில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.18.5இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடத்தில் சமையல் அறை அமைப்பதற்கான பணிகளை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் மாநில உணவு ஆணையத்தின் தலைவர், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் தலைமையில் உணவு ஆணைய உறுப்பினர்கள் கே.என்.மதுபாலா, எம்.கணேசன், கே.கருணாநிதி, எஸ்.பெரியாண்டவர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.